உ

முருகன் துணை.

பஜனாமிர்த பகவத் கீதமென்னும்

# முருகானந்த பக்திரச
# பஜனைக் கீர்த்தனை.

முதற் பாகம்.



இஃது

ராமநாதபுரம்ஜில்லா, சாத்தூர்த்தாலூகா, செங்குன்ற
புரம் போஸ்ட், நடையனேரிக்கிராமம், விஸ்வபிரம்ம
குலத்திலுதித்த சங்கீத சண்டமாருத நாடக இளஞ்
சக்கரவர்த்தி 12-வயதுள்ள அயன்ராஜாபார்ட்

**மாஸ்டர் N. K. வேல்ச்சாமி**

இயற்றியது.

விருதுநகர் ஸ்ரீமான்
இராமலிங்கக் குருக்களவர்களது
சச்சிதானந்தம் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

விலை] 1930 [அணா 2

18 FEB 19…
…DRAS

உ

முருகன் றுணை.

பஜனமிர்த பகவத்கீதமென்னும்

## முருகானந்த பக்திரஸ

# பஜனைக் கீர்த்தனை.

### விநாயகர் காப்பு.

வெண்பா.

சித்தி தருமுருகா னந்தனையர் சேவடிமேற்
பத்திரசக் கீர்த்தனையான் பாடுதற்கு—சத்தியருள்
பாலா கரிமுகவா பாசாங் குசக்கரத்து
சீலா திருவருணீ செய்.

விநாயகர்மீது

தேவாதி தேவநயஞ் ஜெயவருள் ஜெய ஜெய
என்ற மெட்டு.

இராகம்—கல்யாணி        தாளம்—ஆதி

கண்ணிகள்.

வாவா கஜமுகனே        வந்தருள்செய்வாய் சுதனே
காவா யிதுதருணம்        கந்தன்சகோதரனே        வா
சேவடி தினம்        பணிந்தேன்
காவடிக் கந்தன்        துணிந்த
கஜமுக விற்பன        [illegible]யஸ் துதிக்கையா        வா
ஆனைமுக        காப்பதியூரனே
அருள்புரிவாய்        கோமளனே
ஆதரித்        தருள்புரி
சோதரன்போ        ல[illegible]
கதியருள்செய்        கஜமுகனே
கார்த் தருள்வாய்        சிவமயூரா
கருணைசேர் தனையன் வேல சாமி புகழ்ந்திடும்        வா

—

## ஜெய ஜெயக்கோ குலபாலா என்ற மெட்டு.

இராகம்—பைரவி. தாளம்—ரூபகம்

கண்ணி

குருபரா ஓம் பிரணவ மூலா
குமர சங் கீதனே
குகப்ரமா னந்தனே
குன்றா தேவா வாவா காவா குரு
அறுமுக ஸ்ரீ சரவணபவா
ஆதரித் தாள்சுர கீதா
திருவருள் தா திகழ் சேயனே
தீனரக்ஷகா திவ்யன் வேல்ச்சாமி திகழறு முககுக குரு

---

## தயவிலாததென வஞ்சம் என்ற மெட்டு.

பல்லவி.

கார்த்தி கேயனே வாரும் உம்
கழலடி மலரிணை தாரும் நீரும் கா

அநுபல்லவி

நேர்த்தியான மயிலேறி வரும்
நிர்மலாவுனை நித்தமே நினைத்
துனதடி தொழுதிடும் குழவி முன் கா

சரணம்.

கஞ்சமேவ றில்லையெனத் தயங்கி நின்றேனே
தரணியி லுனைச் சதமென நினைந்தேனே
தாழ்பணிந்தேன் முருகேசா
உன் தண்டமிழ்ப்பதப் விண்டுமத் தொடு
பணிந்தேனே அருள்தா எதிரினில் கார்
பாலும்பழ மோடுன தடிமலர் சேவை
வேலுச்சாமியும் தினம் வேண்டினேன் தேவை
சூலியம் வஞ்சகம் யாதும் எனைத்
தொந்தரவிலா மந்திரமதை தொடர்ந்திடும்படி வழியதுடதாக் கார்

---

## மதுரகான சரசராணி என்ற மெட்டு.

இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

பல்லவி.

பழநி வாழ் பண்டாரவேலா
பருவகாலம் வருவாய் லோலா (பழ

அநு பல்லவி.

இளநி யாபிஷேக தூலா
இருபெண்கள் கல்யாண கோலா (பழ

சரணம்.

குமர கீத சரவண பவா
குன்றூர் தேவா குகப்ப காவா
அமரர்களுக் கிறைவனை
சரஹணபவ புரங்கிரி வாழ்
பஞ்சாமிர்தக் காவடி
பால்தேன் பரிமள சேவடி
வெஞ்சா மரைகளும் பூவடி
வேல்சூ லாயுதமுஞ் சூடி
பக்தர் நித்தம் சித்திபெற்று வருவார் அருள் பெறுவார்
அத்தர் சுத்தமாகவுனக் கபிஷேக மேபுரிவார்
பால்தேன் பஞ்சாமிர்தம் பெறு
வேல்ச்சாமியின் கீதப்ரசன் மானம்
பாத்தியச் சோபித முருகன்
வாத்யச் சந்தான மருகன் வளர்திரு (பழ

---

## முருகன் திருமால் மருகன் பெருமை என்ற மெட்டு

இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

பல்லவி

குமரன் திருப்பரங்கிரி வாழ்பவவே குன்றூர்
தேனபி ஷேகனே தியானமெய்ப் போதனே (கு

அநுபல்லவி

அமரர்களுக்கிறைவனென அறுமாமுக சரவண பவகுகனே
திருப்பரங் கிரிவளர் . குமர

சரணம்.

கார்த்திகைவாரகும்பாபிஷேக மேளவாத்தியக் கோஷ்டிமுழங்க கூட
தீபாலங்கார நைவேத்யமும் பாலாபிஷேகத்துடன் வழங்க
சீர்த்திசேர் தனயன் வேல்ச்சாமி தமிழுக்குகந்த சாம்ராஜ்யமாக
வே துலங்க குமர

---

கதனுகுதூகலராக்ப்ரீயே என்ற மெட்டு.

பல்லவி தாளம்—ஆதி.

முருகா குகா கலியுக தேவா
முத்தமிழ்ப் பிரசங்க தத்துவச்சுர லயமோடு குருபர முரு

அநுபல்லவி

திருமால்மருமகனெனும் பூமா
வருக வருக வள்ளிமணாளா புள்ளிக்கலாப முரு

சரணம்

கந்தநாத சாந்த சற்குண
வேதாந்த சிந்தைமகிழ் பாந்த
சற்குணசித் தாந்த
செந்தில் நாயகா விந்தை தாயகா
சற்குரு சாமுத்ரிகா லக்ஷண
தேவா வரவா காவரி முரு
மயில்வா கனமே சுப்ரமண்ய வுதாரா
குயிலோ டுலாவும் குகப்ர மானந்தா
கயிலை ஈசன் சற்குண புதல்வா
தயவா யுனை நன்று வேல் ... காவா. முரு

---

## ஜெய சோடஸ சொரூபா என்ற மெட்டு.

பல்லவி. தாளம்—ஆதி

முருகா மால் மருகக்
கலியுகனே உனதடி மலரிணை கதி முரு

அநுபல்லவி.

திருமால் மருமகனே உன்
திவ்யசெந்தமிழ்ப் பிரஸங்க வித்வ
திங்களரித்த குருபர முரு

சரணம்

வருக வருக மயில்வாக னருட்பாவுங் குருபரகீதா
முருகா கலியுக வருகா சூன் றூர்
தேவதி யானைசேயன் வேல்சாமி பாமணங்கமழ் முரு

---

## அம்பா ளென்பால் என்ற மெட்டு.

இராகம்—அடாணா. தாளம்—ஆதி.

பல்லவி

செந்தூர் வேலா தியான
மகா க்ஷேத்ர பூஜிதனுபோக சாக்ர திருச் செந்

அனுபல்லவி

கந்தாகுகா மூகாசலத்தில் மேவு
கண் பாராய் அருள் தாராய்
சிங்காரா வரந் தாராய் செந்

சரணம்.

கண்பார் காவடி கோடி
உன்பாதந் தேடி வோடி
அன்பாக வேல்ச்சாமி சொல்லிது
அருளே திருவருளே செந்

---

## மகாஸ்தலமும் அதோ தெரியுது என்ற மெட்டு.

பல்லவி.

குகா சண்முக சுகா வரமருள்
குன்றூர் தேவா வாவா காவா பரங்கிரிவளர் குகா

அநுபல்லவி.

மகாஸ்தலத்தின் விநோத தெய்வ
சகாயமொடு சுகானுபவ குகா

சரணம்

சரஹணபவ அறுமுக குக தேவா செந்தூர்
சுதிலய சுதிமதி மரிவுடை காவா வரமருள்
சேயன் வேல்ச் சாமியின்பால் ஓதுசங் கீதகுமர குகா

---

## கந்தா காருண்யனே என்ற மெட்டு,

பல்லவி. தாளம்—ஆதி

செந்தூர் வேல் முருகா
திரு மால் மருகா செந்
திருமால் மருகா அதி
சுந் தருகா செந்

அநுபல்லவி.

பந்தபாசத்தி லேகிடந்து நான்
பாதவித்து மெய் வாடுறேன்
இந்தவேளை யுந்தன் தெரிசனம்
தந்துதவு மன்றாடுறேன் செ

தொகையரு.

திருப்பரங்கிரி தனிலிருந்தன்பு செய்வாய்
கோமானே
அருட்பாவு சேவித்து நின்றேன் பூமானே

பாட்டு.

ஆதியோட ஞதியாகிய அய்யனே துதி மெய்யனே
ஜோதியே சுட ரொளி சந்த்ர
வேல்சாமியைக் கா ரய்யனே
வந்தா தரிகுகா சிவனரி மருகா செக்.

சுபம்! சுபம்! சுபம்!

முற்றிற்று.

—

கூடியசீக்கிரம் இதன் இரண்டாம் பாகம் வெளிவரும்
எதிர்பாருங்கள்.

